OS 110/2018

வா.சா.2 சத்தியராஜ் த/பெ தருமன்

நாள் 31.01.2025

குறுக்கு விசாரணை

1. நான் வள்ளியம்மாள் கோரா மில்லில் வேலை செய்து வருகிறேன். வாதி கருணாமூர்த்தியை எனக்கு நன்கு தெரியும். வாதி தான் நான் வேலை செய்யும் மில்லின் உரிமையாளர் என்றால் சரிதான். வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

2. இந்துமதிக்கு கருணாமூர்த்தி பணம் கொடுத்தார் அது சம்மந்தமான வழக்கிற்கு தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி நினைவில்லை ஆனால் 2017ம் வருடம் ஆகும். எங்கள் மில்லில் வைத்தே பணம் கொடுத்தார். என் பிரமாண வாக்குமூலத்தில் மில்லில் வைத்து தான் பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. வாதி பணத்தை ரொக்கமாக தான் கொடுத்தார். ரூ.3,00,000/- மற்றும் வட்டியுடன் சேர்த்து வாதி ரொக்கமாக கொடுத்தார் அவ்வாறு கொடுக்கப்பட்ட வட்டி தொகை எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது வாதிக்கு தான் தெரியும். நான் பணம் கொடுக்கல் வாங்கலை நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல பார்த்தேன். கொடுத்ததாக சொல்லப்படும் பணம் ரூ.500/- மற்றும் ரூ.100/- கட்டுகளாக கொடுக்கப்பட்டது.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ2 மேடோவர் குறிப்பில் நான் செய்த வா.சா.ஆ7 கையெழுத்தின் போது நான் கையெழுத்து போட்ட அந்த மேடோவர் குறிப்பில் வாதி இந்துமதிக்கு கொடுத்த தொகை குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த தொகை எவ்வளவு என்றால் ரூ.3,00,000/- மற்றும் வட்டி என்று எழுதிருந்தது. அவ்வாறு வட்டியுடன் சேர்த்து மொத்த தொகை எவ்வளவு எழுதப்பட்டிருந்தது என்றால் தெரியாது. நான் போட்ட கையெழுத்து தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ7 ஆகும். வா.சா.ஆ7 கையெழுத்து வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க போட்டேன் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ2 மேடோவர் குறிப்பு பூர்த்தி செய்யப்பட்டு அதன் பிறகு அதில் என்ன பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது என்பதை வாதி ஆகிய என் உரிமையாளர் கையெழுத்து போட சொன்னதால் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

6. பிரதிவாதி அமுதாவை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனக்கு பிரதிவாதியை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலம் நான் தாக்கல் செய்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனக்கு படித்து காண்பித்து அதை புரிந்து கொண்டு தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதியை எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி என் உரிமையாளர் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. 2017 ம் ஆண்டில் பணம் மதிப்பிழப்பு ஏற்பட்டிருந்ததால அந்த காலகட்டத்தில் நான் சொல்வது போல் பணப்பரிவர்த்தனை நடக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. என் உரிமையாளருக்காவும் அவருடைய மகளுக்காவும் பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.